**நாத்தாண்டிய பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாத்தாண்டிய பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாத்தாண்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 1,010,000 ஆன 03 காணிகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | காணிகளின் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புதிய பிரதேச சபைக் கட்டிடத்தில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுற்ற வேலைகளின் பெறுமதியான ரூபா 28,976,233 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதியை பட்டியலைப் பரீட்சித்து பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கணக்கீடு செய்வதாக | வேலைகளின் முடிவுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் செய்யப்பட்ட வேலையின் பெறுமதி, கணக்கீடு செய்யப்படாதிருந்த முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த 16 நிர்மாணங்களும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 27 நிர்மாணங்களும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த ஆனால் வேலை ஆரம்பிக்கப்படாத 47 நிர்மாணங்களும் என 90 நிர்மாணங்களின் | திசெம்பர் 31 ஆம் திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த கையிலுள்ள பட்டியல் பெறுமதி மாத்திரம் அடுத்த நிர்மாண கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டதாக | பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி மாத்திரம் நிர்மாண கடன் கொடுத்தோராகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கைப் பெறுமதியான ரூபா 57,686,318 தொகை கணக்கீடு செய்த காரணத்தால் நிர்மாண கடன் கொடுத்தோர் மற்றும் மூலதனச் செலவினம் அப் பெறுமானத்தால் கணக்குகளில் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 37 நிர்மாணங்களுக்குரிய கிராமிய வீதிகள் மற்றும் எஞ்சிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சில் இருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி ரூபா 988,386 கூடுதலாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு தொகையை மிகைத்து கிடைக்க வேண்டிய பெறுமதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை நிர்வாகச் செலவினமாக சபைக்கு வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் கணக்கீடு செய்யப்பட்டதாக. | பெற வேண்டிய சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 153,111,736 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 106,000,263 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரிகள்** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச துறையின் 162 அலகுகளுக்காக ரூபா 268,981 தொகையும் தனியார் துறையின் 11802 அலகு களுக்காக ரூபா 21,585,393 என மொத்தப் பெறுமதி ரூபா 21,854,374 ஆன வரி அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு அரச துறையின் 48 அலகுகளுக்காக ரூபா ரூபா 80,373 தொகையும் தனியார் துறையின் 4036 அலகு களுக்காக ரூபா 2,834,584 தொகையும் அறவிடப்பட்டிருந்தது. | நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவையாக உள்ள வீதவரியை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) ஏக்கர் வரி**

--------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச துறையின் 19 வரி அலகுகளுக்காக ரூபா 47,155 உம் தனியார் துறையின் 687 வரி அலகுகளுக்காக ரூபா 673,236 தொகையுமாக மொத்தப் பெறுமதி ரூபா 720,391 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு தனியார் துறையிடம் இருந்து மாத்திரம் 22 அலகுகளுக்காக ரூபா 14,571 அறவிடப்பட்டிருந்தது. | ஏக்கர் வரியின் கீழ் வராத ஆதனங் களுக்காகவும் ஏக்கர் வரி வருவதால் அந் நிலுவை ஏக்கர் வரிகளை பதிவழித்து அந்த ஆதனங்களை வீதவரியின் கீழ் உட்படுத்துவதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பேன். உரித்தாளர் இல்லாத இனங்காணப்படாத ஆவணங்கள் பதிவழிப்பதற்கு ஆளுனரின் அங்கீகாரத்தின் கீழ் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவை ஏக்கர் வரிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) வாடகை**

----------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 62 அலகுகளுக்கான கடை வாடகை ரூபா 1,388,975 தொகையும் 27 அலகுகளுக்காக குத்தகை வாடகை ரூபா 2,969,962 உமாக 89 அலகுகளுக்காக மொத்தம் ரூபா 4,358,937 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு 57 கடை அலகுகளுக்காக ரூபா 719,682 தொகையும் 15 குத்தகை வாடகை அலகுகளுக்காக ரூபா 439,866 உம் அறவிடப்பட்டிருந்தது, | நிலுவைப் பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவையாக உள்ள கடை வாடகை மற்றும் குத்தகை வாடகை என்பவற்றை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

----------------------------------

| | | |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 24 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தின் iv (ஆ) பகுதியின் (உள்ளூராட்சி மன்றம்) குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றுக்காக ரூபா 1,250 தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்த போதும் சுற்றாடல் அனுமதிப்பத்திர வருமானமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 136 | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவையாக உள்ள வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நிர்மாணங்களில் இருந்து ரூபா 273,000 அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு 47 நிர்மாணங்களில் இருந்து ரூபா 72,500 அறவிடப்பட்டு இருந்ததுடன் 22 நிர்மாணங்களின் வியாபார நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 60,500 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய கெப் வண்டி 2019 ஜுன் 13 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டிருந்தது. அத்திகதியில் வாகன சாரதி விடுமுறை பெற்றிருந்தமை மற்றும் கடமை மேவுகைக்காக சாரதி ஒருவர் இல்லாமை காரணமாக சபையின் தலைவர் மேற்படி தினத்தில் வாகனத்தின் சாரதியாகச் செயற்பட்டு இருந்தார். அதன் போது வாகனத்தை ஓட்டிச் சென்ற தலைவர் அதிக வேகத்தை கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் வீதியின் இடது பக்கத்தில் இருந்து வெளியேறிச் சென்று மதகு ஒன்றில் மோதியதால் கெப் வண்டியின் முன்பக்கம் பின்பக்கம் இடது பக்கம் வலது பக்க உடல் பகுதிக்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன் வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 2,900,000 ஆக இருந்தது. விபத்து தொடர்பாக பரிசோதனை நடத்திய குழுவினால் சேதங்கள் நட்டங்கள் தொடர்பாக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு நி.பி 105 இல் குறிப்பிடப்பட்ட வகையில் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2019 நவம்பர் 20 ஆம் திகதி வரை அப் பரிந்துரை செயற்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை. | விழா ஒன்றிற்காகத் தலைவரின் பங்களிப்பு அவசியமாக இருந்ததால் தலைவரால் கெப் வண்டி எடுத்து செல்லப்பட்டதாக அறிவித்திருந்துடன் கெப் வண்டியின் சாரதி அன்று அவசர விடுமுறை இருப்பதாக அறிவித்திருந்ததால் சாரதி தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதாகவும் | உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தின் மூலம் செய்யப்பட்ட பரிந்துரையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |